**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.16/2019**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெங்கடேசன் | மதம் | : இந்து |
| த/பெ | : வேணுகோபாலன் | ஜாதி | : -- |
| வயது | : 51 | கிராமம் | : பெரியகடம்பூர் |
| தொழில் | : தனியார் நிறுவனம் | வட்டம் | : திருத்தணி |

**26.11.2024**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

4. வழக்கு சொத்திற்கு அருகில் எனக்கு மாடி வீடு உள்ளது என்றால் ஆமாம். அதில்தான் நான் தற்போது வசித்து வருகிறேன் என்றால் ஆமாம். ரங்கசாமியின் மனைவி பெயர் ராஜாம்மாள் என்றால் சரிதான். ரங்கசாமிக்கும் ராஜாம்மாளுக்கும் மொத்தம் எத்தனை பேர் வாரிசுகள் என்றால் 8 பேர். அவர்கள் யார்யார் என்றால் வெங்கடேசன், ரேவதி, சிலுக்காம்மாள், ரஞ்சிதம், கோவிந்தராஜ், ஆறுமுகம், கௌரி, மற்றொருவர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை.

5. வழக்கு சொத்தை வெங்கடேசனும் ரேவதியும்தான் எனக்கு எழுதிக் கொடுத்தார்கள் என்றால் சரிதான். வெங்கடேசனுக்கும் ரேவதிக்கும் வாய்மொழியாக பாகப்பிரிவினையில் கிடைத்ததாக சொல்வதில் யார் யாருக்கு என்ன சொத்து பாகத்தில் கிடைத்தது என்றால் என்வீட்டிற்கும் எதிரே உள்ள சொத்து வெங்கடேசனுக்கும் ரேவதிக்கும் வந்தது. மற்றவர்களைப் பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்து வெங்கடேசனும் ரேவதியும் அனுபவித்ததற்கு வீட்டு வரி ரசீதோ,

பட்டாவோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் அது காலி இடமாகும். பிரமாண வாக்குமூலத்தில் வெங்கடேசனும் ரேவதியும் ஆண்டு அனுபவித்து வந்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை.

6. வெங்கடசேனுக்கு என்ன வயது என்றால் 59 வயதாகிறது. அவர் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிசெய்கிறார் என்றால் சரிதான். வெங்கடேசன் சென்னை பட்டாபிராமில் 20 வருடங்களுக்கு மேலாக வசித்து வருகிறார் என்றால் அவ்வளவு நாளாக இருக்காது. ஒரு 6,7 வருடமாக உள்ளார். வழக்கு சொத்தில் தற்போது குடிசை உள்ளது என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் வழக்கு சொத்தில் சுற்றுசுவர் எழுப்பியதாகவும் பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததாகவும் கூறியுள்ளதில் அதற்கு ஆதரவாக நான் புகைப்படம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

7. நான் வழக்கு சொத்தில் சுற்றுசுவர் எதுவும் போடவில்லை என்றால் வழக்கு சொத்தில் தற்போதும் குடிவைவீடுதான் உள்ளது என்றால் இல்லை. குடிசை வீட்டை பிரதிவாதிதான் கட்டியுள்ளார் என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் இல்லை. சுற்றுசுவர் கட்டும்போது பிரச்சனை செய்யதாக கூறியுள்ளதில் நான் காவல்துறையில் புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்தேன். காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட ரசீதையோ, புகார் மனுவின் நகலையோ தாக்கல் செய்துள்ளேனோ என்றால் இல்லை.

8. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ,1 பட்டா எந்த ஆண்டு வாங்கப்பட்டுள்ளது என்றால் 26.02.2019 ல் வாங்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 பட்டாவின்படிதான் எனக்கு கிரையம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான் கிரையம் 2018 ல் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். 2019 ல் பட்டா பெற்றுவிட்டு அதற்கு முன்பே 2018 ல் கிரையம்

பெற்றுள்ளேன் என்றால் நான் கிரையம் பெற்றபின்புதான் பட்டா வாங்க சென்றேன். என் பெயருக்கு நான் பட்டா கேட்டபோதுதான் பிரதிவாதிகள் ஆட்சேபணை செய்து விட்டார்கள்.

9. பிரதிவாதி தினகரனின் பாட்டி பெயர் லட்சுமி என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பிரதிவாதி தினகரனின் அப்பா பெயர் நரசிம்மன் என்றால் சரிதான். பிரதிவாதி லட்சுமியம்மாள் வாய்மொழியாக ரங்கசாமியிடம் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை. நரசிம்மன் என்பவர் வழக்கு சொத்தை அனுபவித்து வந்து அதன்பின்பு பிரதிவாதி வழக்கு சொத்தை ஆண்டனுபவித்து வீடு கட்டியுள்ளார் என்றால் இல்லை. ரெங்கசாமி, ராஜம்மாளின் வாரிசுகள் 21.07.2004 ம் தேதியிட்டு பிரதிவாதிகளுடன் கிரைய ஒப்பந்தம் செய்துள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது.

10. அந்த கிரைய ஒப்பந்தத்தில் எனக்கு கிரையம் கொடுத்த வெங்கடேசன், ரேவதி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி தினகரன் அ.வ.எண்.12/2019 தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். எதற்காக அந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் இடத்திற்காக தாக்கல் செய்தார். அந்த வழக்கில் வெங்கடேசன் 7ம் பிரதிவாதியாகவும், ரேவதி 3ம் பிரதிவாதியாகவும், நான் 1ம் பிரதிவாதியாகவும் உள்ளேன் என்றால் இல்லை. அந்த வழக்கில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியுள்ளேன் என்றால் இல்லை. நான் அந்த வழக்கில் ஸ்ரீராமலு என்ற வழக்கறிஞர்மூலம் வழக்கை எதிர்நடத்தி வருகிறேன் என்றால் ஆமாம்.

11. எனக்கு அந்த வழக்கு குறித்து எல்லா விபரமும் தெரியும் என்றாலும் கிரைய ஒப்பந்த விபரம் தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அதை தெரிந்து

கொண்டுதான் அந்த வழக்கில் நான் ஆஜர்ஆகாமல் ஒருதரப்பு ஆகியுள்ளேன் என்றால் அனைத்து வழக்கிற்கும் வந்துக் கொண்டுதான் இருக்கிறேன். அ.வ.எண்.12/2019 ஐ நான் எதிர்நடத்தவில்லை என்றால் அது அவசியம் இல்லை என்பதால் விட்டுவிட்டேன். எனது கிராமத்தில் கிருஷ்ணமூர்த்தி, தனபால் என்பவர்கள் உள்ளார்களா என்றால் ஆமாம். அவர்கள் இருவரும் மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையெழுத்து இட்டதை குறித்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் அவர்கள் அவ்வாறு சொல்லவில்லை என்றும் நீதிமன்றத்தில் கூப்பிட்டு என்னவென்று கேட்டதாக சொன்னார்கள்.

12. வழக்கு சொத்தில் நான்தான் அனுபவித்து வருகிறேன் என்று வீட்டுவரி ரசீது, மின்கட்டண வரிரசீது, அனுபவ சான்று ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் நான்தான் அனுபவித்து வருகிறேன். அது காலி இடமாக உள்ளது.வெங்கடேசனோ, ரேவதியோ, நானோ எந்த காலத்திலும் அனுபவித்தது இல்லை என்றாலும் சரியல்ல. எனவே நான் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்துள் இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பத்தக்கது என்றால் சரியல்ல.

(மறுவிசாரணை இல்லை.)